# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
### கத்தோலிக்கத்திருமறை

சுட்டெண் ......................................................

**தரம்: 06**

**நேரம் - 1.30 மணித்தியாலம்**

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01) பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் அடிப்படையாகக் கொண்டது,
   1) புதிய ஏற்பாடு 2) திருவிவிலியம் 3) பழையஏற்பாடு 4) பஞ்சாகமம்

2. புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நூல்களையும் அறிமுகப்படுத்துவது,
   1) நற்செய்தி நூல் 2) பஞ்சாகமம் 3) இறைவாக்கினர் நூல் 4) வரலாற்று நூல்

3. புனித திருவிவிலியத்தினுள் அடங்குவது,
   1) இறைப்படைப்பு 2) பஞ்சாகமம் 3) இறைவார்த்தை 4) மீட்பின் வரலாறு

4. யோவான் நற்செய்தியின் அடையாளமாக அமைவது?
   1) சிங்கம் 2) எருது 3) மனிதன் 4) கழுகு

5. எபிரேய மொழியில் தோரா என அழைக்கப்படுவது,
   1) திருவிவலியம் 2) விடுதலைப்பயணம் 3) பஞ்சாகமம் 4) இஸ்ரயேல் மக்கள்

6. உரோமை மக்களின் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு கட்டளையிட்ட அரசன்
   1) பார்வோன் 2) தாவீது 3) சாலமோன் 4) அகுஸ்துசீசர்

7. பன்னிரண்டு வயதுடைய இயேசு எத்திருவிழாவை கொண்டாடுவதற்கு எருசலேமிற்கு சென்றார்
   1) பாஸ்கா விழா 2) கூடார விழா 3) காணிக்கை விழா 4) பெந்தக்கோஸ்து விழா

8. இறைவன் மிருகங்களையும், மனிதனையும் படைத்தது
   1) 7ம் நாள் 2) 2ம் நாள் 3) 6ம் நாள் 4) 1ம் நாள்

9. இயேசு பிறந்த ஊர்
   1) எருசலேம் 2) பெத்லகேம் 3) நாசரேத்து 4) கலிலியா

10. விடுதலைப் பயணத்தின் பிரதான பாத்திரமாய் திகழ்பவர்
    1) இயேசுக்கிறிஸ்து 2) மோசே 3) ஆபிரகாம் 4) ஈசாக்கு

**02) பின்வரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு கீழ் வரும் இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.**

( மத்தேயு நற்செய்தி , ஆறு நாற்கள் , லூக்கா, உருவிலும் சாயலிலும் , விடுதலைப்பயணம் )

11. இறைவன் ............................................................................... நாட்களில் உலகைப் படைத்தார்

12. இறைவன் அவருடைய ............................................................................. மனிதனைப் படைத்தார்

13. .............................................................................பஞ்சாகமத்தில் அடங்கும் நூலாகும்

14. நற்செய்தி எழுதிய ஒரேயொரு பிற இனத்தவர் .............................................................................

15. ............................................................................. புதிய ஏற்பாட்டில் அடங்கும் நூலாகும்.

**03) பின்வரும் வினாக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.**

16. இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து காணப்பட்டார். ( )

17. யோசேப்பு தாவீதின் வழிமரபைச் சேர்ந்தவர் ( )

18. இறை வாழ்க்கைக்கு பங்காளியாவது மனிதன் மாத்திரமே ( )

19. யூதர்களின் அரசராக பிறந்திருக்கின்றவர் யார் என வினாவியது தாவீது அரசன் ஆவார். ( )

20. திருமுழுக்கு யோவான் ஒரு அரசனாவார். ( )

**(2 × 20 = 40 புள்ளிகள்)**

## பகுதி - II

● **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) 1. புதிய ஏற்பாட்டில் அடங்கும் இரண்டு நற்செய்தி நூல்களின் பெயர்களை எழுதுக.

2. பஞ்சாகமத்தில் உள்ளடங்கும் நூல்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

3. இறைவன் நான்காம் நாளில் படைத்த இரு விடயங்களை எழுதுக

4. இயேசுவிடம் காணப்பட்ட பண்புகள் இரண்டு எழுதுக

5. லூக்கா, மாற்கு ஆகிய நற்செய்திகளின் அடையாளங்களை முறையாக எழுதுக

6. யூதர்களின் சமய சம்பிரதாயங்கள் இரண்டு எழுதுக

7. யோசேப்பிடம் காணப்பட்ட பண்புகள் இரண்டு எழுதுக

8. தொடக்க நூலில் இடம்பெறும் இரண்டு விடயங்களை எழுதுக

9. இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த இரண்டு பொறுப்புக்களை எழுதுக

10. புனித லூக்கா பற்றி உமக்குத் தெரிந்த இரண்டு விடயங்களை எழுதுக.

**(2 × 10 = 20 புள்ளிகள்)**

2) 1. பஞ்சாகமத்துக்கு கொடுக்கப்படும் வேறு இரு பெயர்களை எழுதுக.

2. விடுதலைப் பயண நூலில் உள்ளடங்கும் சம்பவங்கள் இரண்டு எழுதுக

3. மோசேயின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் ஐந்து எழுதுக

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

3) 1. இறைவன் ஆதிப்பெற்றோரை குடியிருக்கச் செய்த தோட்டத்தின் பெயரை எழுதுக.

2. மனிதன் படைப்புக்களை அழிக்கும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக

3. படைப்புக்களை பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்கக்கூடிய வழிமுறைகள் ஐந்து எழுதுக.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

4. 1. அவன் நாசிகளில் ...................................... ஊத மனிதன் ...................................... ஆனான். இடைவெளி நிரப்புக

2. மனிதன் ஏனைய படைப்புக்களை விட உயர்ந்தவனாக கருதப்படுவதற்கான 3 காரணங்களை எழுதுக

3. மனிதனிடம் காணப்படும் வெவ்வேறான ஆற்றல்களை பிறரது நலனுக்காக எவ்வகையில் பயன்படுத்த முடியும் என்பதற்கான ஆலோசனைகள் ஐந்து எழுதுக.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

5. 1. “நானோ கணவனை அறியேன்” இது எங்ஙனம் நிகழும் ? இவ் வார்த்தை யாரால் யாருக்கு கூறப்பட்டது.

2. ஞானிகள் இயேசுவைக் காண்பதற்கு எடுத்துச்சென்ற மூவிதப் பொருட்களும் எவை?

3. சமாதானமாக வாழ வீட்டிலும், பாடசாலையிலும் மேற்கொள்ளக்கூடிய ஐந்து செயல்களை எழுதுக.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**